**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

**OS.No:** 5/2017 நாள் 17.07.2025.

வாசா.1, திருமதி.முத்தம்மாள்

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2 முதல் 4 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கை தாக்கல் செய்துகொள்வதற்கும் சாட்சிய பிரமான பத்திரிக்கையை தாக்கல் செய்துகொள்வதற்கும் பதில் வழக்குரையை தாக்கல் செய்தகொள்தவற்கும் நான் தான் தகவல் சொன்னேன்.நான் பள்ளி படிப்பை படிகக்வில்லை. நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. வழக்குரையில் என்னுடைய தந்தையின் முதல் மனைவி முத்தம்மாள் என்பவர் 75 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்று நான் சொல்லியுள்ளது சரிதான். முத்தம்மாளுக்கு அப்பொழுது வயது 35 இருக்கும். என் அப்பாவுக்கும் அவருடைய முதல் மனைவியான முத்தம்மாளுக்கும் இடையே பிறந்த ஒரே மகன் இவ்வழக்கின் 1ம் எதிர்வாதி ஆறுமுகம் ஆவார். எனக்கு திருமணமாகி 40 வருடம் இருக்கும்.தேதி எனக்கு ஞாபகமில்லை. எனக்கு திருமணம் ஆன காலம் முதல் என் கணவரோடு நான் திருப்பூரில் தான் வசித்து வருகிறேன் என்று சொன்னால் தற்சமயம் பஞ்சம் பிழைக்க வேண்டியே நாங்கள் திருப்பூருக்கு சென்றுள்ளோம். வழக்குரையில் எனக்கு எந்த ஆண்டு எப்படி திருமணம் நடந்தது என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என் திருமணத்தை என் தகப்பனார் நல்ல முறையில் சீர் செய்து திருமணத்தை நடத்திவைத்தார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி 4 ஆண்டு காலம் கழித்து என் அப்பா இறந்துபோனார். என் அப்பா திடீர் என்று தான் காலமானார் அவருக்கு உடல் நலம் நன்றாகத்தான் இருந்தது. இந்த வழக்குரையில் நான் 2 அயிட்ட சொத்துக்களாக காண்பித்துள்ள விபரம் எனக்கு தெரியும். பிராது 1ம்அயிட்ட சொத்தானது என் அப்பாவுடைய சுய சம்பாத்திய சொத்து என்றால் சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்தானது பூர்வீக பொதுகுடும்ப சொத்து என்றால் சரிதான். நான் சிறு வயதில் இருக்கும போது பிராது 1ம் அயிட்ட சொத்தை என் அப்பா கிரையம் வாங்கியிருந்தார். பிராது 1ம் அயிட்ட சொத்தை 26.02.1992ம் தேதியில் கிரையம் வாங்கியதாக நான் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு திருமணத்திற்கு முன்பும் பின்பும் என்அப்பாஉயிரோடு இருந்த காலம் வரையிலும் பிராது சொத்துக்களின் பேரில் பாகம் கோரவில்லை என்று சொன்னால் அப்படியில்லை நான் பாகம் கோரினேன் பின்பு தருவதாக என்

அப்பா சொல்லிவந்தார். நான் பாகம் கேட்டு பின்னீட்டு என் அப்பா பாகம் தருவதாக சொல்லும் விபரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எப்பொழுதும் வழக்கு சொத்துக்களை பொறுத்து என் அப்பாவிடம் பாகம் கேட்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. திருமணத்திற்கு பின்பு என் பெற்றோர்களை நான் பார்ப்பதற்கு நான் அடிக்கடி என் பெற்றோர் வீட்டிற்கு வந்து சென்றுள்ளேன். அந்த சமயத்திலும் நான் என் பெற்றோரிடம் பாகம் கேட்கவில்லை என்ற சொன்னால் அப்படியில்லை பின்னீட்டு தருவதாக என் அப்பா சொல்லிவந்தார். நான் அவ்வாறு என் பெற்றோர் வீட்டிற்கு வரும்போது எல்லாம் தாவா சொத்தின் பேரில் என் அப்பாவிடம் பங்கு கேட்டு பின்னீட்டு என் அப்பா தருவதாக சொன்னதாக நான் வழக்குரையல் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என்அப்பா இறந்த பின்பும் 2005 ம் ஆண்டுக்கு முன்பும் என் பாகத்தை தர வேண்டி நான் வழக்கில் உள்ள 3, 4 எதிர்வாதிகளின் தகப்பனார் முத்துச்சாமியிடம் கேட்டேனா என்று கேட்டால் என் அப்பா அவரிடத்தில் என்பங்கை கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார். இந்த விபரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். பிராது 2 ம் அயிட்ட சொத்தின் சர்வே எண் விபரம் எனக்கு தெரியாது. பிராது 2 ம்அயிட்ட சொத்தானது என் அப்பா மற்றும்அவருடன் பிறந்த சகோதரர்களுக்குள் ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின் மூலமாக என் அப்பாவின் பாகத்திற்கு கிடைக்கப்பட்ட நான் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா இறந்துபோன பின்பு என் அப்பாவுடைய இரண்டாவது மனைவி வேலம்மாள் பிராது சொத்துக்களை பராமரித்து வந்தார் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.என் தயார் வேலம்மாள் எந்த ஆண்டு வரை அவ்வாறு பராமரித்து வந்தார் என்ற விபரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை. நான் வழக்குரையில் 2015 ம் ஆண்டு டிசம்பர் மாதம் பாகம் வேண்டும் என 2 முதல் 4 பிரதிவாதிகளிடம் கேட்டதாக சொல்லியுள்ளேன். அவ்வாறு யார் யார் முன்னிலையில் எங்கு வைத்து பாகம் கேட்டேன் என்ற விபரத்தை என் வழக்குரையில் சொல்லவில்லை. நான் பாகம் சம்மந்தப்பட்ட இந்த எதிர்வாதிகளை எந்த சமயத்திலும் பார்க்கவில்லை என்றும் கேட்டதில்லை என்றும் சொன்னால் அது சரியல்ல. என் அப்பா வழக்கில் உள்ள 3, 4 எதிர்வாதிகளின் தகப்பனார் முத்துச்சாமிக்கு 16.03.1992 ம் ஆண்டு ஒரு உயில் ஆவணத்தை எழுதிவைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் என் அப்பா அப்படி உயில் எதுவும் எழுதிவைக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பதில்

வழக்குரையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்று கேட்டால் நான் பள்ளி படிப்பை படிக்கவில்லை என்பதால் என்னால் அதை படிக்க முடியவில்லை. பதில் வழக்குரையில் மேற்படி உயில் ஆவணம் பற்றி நான் சொல்லியுள்ள பொழுது எனக்கு எப்பொழுது தெரியும்என்று கேட்டால் வழக்கு போட்ட பின்பு தான் எனக்கு தெரியும்.அப்படி எனக்கு தெரிந்தவுடன் பத்திர பதிவு அலுவலகத்தில் இருந்து அதன் நகலை வாங்கி பார்த்தேன். அந்த பதிவு நகலை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இந்த உயில் சட்டப்படி செல்லாது என்று சொல்லி நான் வழக்குரையில் தனியாக பரிகாரம் எதுவும் கோரவில்லை. 2, 3 எதிர்வாதிகளின் பெயரிலான உயில் ஆவணம் பற்றி வழக்கை தாக்கல் செய்துகொள்வதற்கு முன்பாகவே எனக்கு தெரியும் என்றும் தற்பொழுது தான் எனக்கு தெரியவந்ததாக நான் வழக்கிற்காக வேண்டி தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு உயில் பற்றிய விபரம் தெரிந்திருந்தும் அது பற்றி வழக்குரையில் சொல்லாமல் மறைத்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. அந்த விடுதலை நிரப்ப வேண்டி தற்பொழுது தான் வழக்கை தாக்கல் செய்த பிறகு தான் தற்பொழுது உயில் ஆவணம் பற்றி எனக்கு தெரியவந்ததாக சொல்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. என் தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்தை என் சகோதரரான முத்துச்சாமிக்கு என் அப்பா உயில் ஆவணம் எழுதிக்கொடுக்க அவருக்கு உரிமை உள்ளதுஎன்று சொன்னால் அது சரியல்ல. அந்த உயில் ஆவணமானது என் தகப்பனார் காலமானவுடன் நடைமுறைக்கு வந்துவிட்டது என்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் அது சரியல்ல. என் தகப்பனார் காலமான பின்பு அந்த உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்து என் சகோதரர் முத்துச்சாமி அந்த சொத்தை அடைந்து அனுப்பவித்து வந்த விபரம் எனக்கு தெரியும்என்று சொன்னால் அது சரியல்ல. முத்துச்சாமி இறந்தபின்பு 2012ம் ஆண்டு அவரது வாரிசுதாரர்களும் மற்றும் என்தயாரும் சேர்ந்து வழக்கில் உள்ள 3, 4ம் எதிர்வாதிகளுக்கு பிராது 1ம் அயிட்ட சொத்தை பொறுத்து ஒரு பாக பாத்திய விடுதலை ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ள விபரம் எனக்குதெரியுமா என்று கேட்டால் தெரியாது. மேற்படி பாக பத்திய விடுதலை ஆவணம் சட்டப்படி செல்லாது என்று நான் பதில் வழக்குரையில் சொல்லியுள்ளேன். மேற்படி பாக பத்திய விடுதலை ஆவணம்பற்றி எனக்கு எப்போது தெரியும் என்று கேட்டால் வழக்கை தாக்கல் செய்த பின்பு தான் நான் அதன் நகலை சார்பதிவக அலுவலகத்தில் இருந்து வாங்கி பார்த்தபோது தான் தெரியவந்தது.மேற்படி பாக பாத்திய விடுதலை

ஆவணத்தின் நகலையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த பாக பத்திய விடுதலை ஆவணத்தில் என் தயாரும் சேர்ந்து கையொப்பம் செய்தள்ள விபரம் எனக்கு தெரியாது. மேற்படி பாக பாத்திய விடுதலை ஆவணம் பற்றி எனக்கு நன்றாக ஏற்கனவே பதெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக வேண்டி எனக்கு தெரியாதுஎ ன்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. பிராது 1ம் அயிட்ட சொத்தானதை வழக்கின் 3, 4 எதிரிவாதிகளின் அனுபவத்தில் தான் உள்ளது' என்றால் சரிதான். பிராது 1ம்அயிட்ட சொத்தானதை நானும், 3, 4 எதிர்வாதிகளுடன் சேர்ந்து கொண்டு கூட்டாக அனுப்பவித்து வருகிறேன் என்பதை காண்பிக்கக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. பிராது 2வது இலக்க சொத்தின்சொத்து ரசீது, மின் கட்டண ரசீது தவிர வேறு ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது 2ம் இலக்க சொத்தானது என் அப்பாவின் மூத்ததாரத்து மகனான 1ம் எதிர்வாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். பிராது 1ம் அயிட்ட சொத்தில் எனக்கு பாகம் கோர உரிமைஇல்லை என்றும் பிராது 2ம் அயிட்ட சொத்தில் தான் எனக்கு பாகம்கோர உரிமை உள்ளது என்று சொன்னால் அப்படியில்லை. நான் வழக்குரையில் எந்த தேதியில் பாகம் கேட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லாமல் 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் பாகம் கேட்டதாக கற்பனையான மாதம் ஆண்டை சொல்லி ஒரு வழக்கு மூலமாக சொல்லி இவ்வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. எனக்கு திருமணம் ஆன சமயத்தில் இருந்தே பொது குடும்பத்தில் இருந்து சொத்தை பொறுத்தமட்டில் நான் உடமைநீக்கம்செய்யப்பட்டுவிட்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. பிராது 1ம்அயிட்ட சொத்தானது என் தகப்பனாருக்கு சுய சம்பாத்திய சொத்து என்பதை தெரிந்துகொண்டே வழக்கில் உள்ள 3, 4 எதிர்வாதிகளை அழைக்கழிக்க வேண்டி நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல அது போல் என் தகப்பனார் என் சகோதரர் முத்துச்சாமிக்கு உயில் ஆவணம் எழுதி வைத்திருந்ததை தெரிந்தகொண்டே இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன்எ ன்றால் சரியல்ல. என் தகப்பனார் காலமாகி சுமார் 23 ஆண்டுகாலம் கழித்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறந்துபோய் 23 ஆண்டுகால கட்டத்தில் மேற்படி உயில் ஆவணம் மற்றும் பாக பாத்திய விடுதலை ஆவணம் பற்றி எனக்கு தெரியாது என்று நான் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தவறான மற்றும்உற்பத்தி செய்யப்பட்ட வழக்குமூலத்தின்

அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கானது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல. எனக்கு தாவா சொத்தின்பேரில் எந்தவிதமான பாக உரிமை இல்லை என்றும் நான் வழக்கில்கோரிய பாக பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனவே வழக்கானதை 2 முதல் 4 எதிர்வாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 17th day of July 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.